ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2135/53 - 2019 අගෝස්තු මස 07 වැනි බදාදා - 2019.08.07

**2135/53 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 07 ஆந் திகதி புதன்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*பணிப்புரை இல. 68*

***2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம் பிரிவு 10 (1) (அ) இன் கீழான பணிப்புரை***

*2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 10 (1) (அ) இன் கீழ் உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் தொழிற்படுகின்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருட்களின் அனைத்துத் தயாரிப்பாளர்கள், இறக்குமதியாளர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் வியாபாரிகளுக்கு அத்தகைய பொருட்கள்/பண்டங்களின் பொதிகள் கொள்கலன்கள் அல்லது உறைகளின் மீது கீழ்க்காணும் விபரங்களை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் தெளிவாகத் தெரியும் வகையில் அச்சடிக்கப்படுதல் வேண்டுமென பணிப்புரை விடுக்கின்றது.*

*ஆகக்கூடிய சில்லறை விலை*
*தொகுதி இலக்கம்*
*காலாவதியாகும் நாள்*
*உற்பத்தி திகதி*
*நிகர நிறை/அளவு*
*உற்பத்தி செய்யப்பட்ட நாடு/தயாரிக்கப்பட்ட நாடு*
*மீள் பொதியிடப்பட்ட திகதி/(மொத்தமாக இறக்குமதி செய்யப்பட்டு மீள்பொதியிடப்பட்ட பொருட்கள் அல்லது பொதியிடப்பட்ட மொத்த உற்பத்தியில்/பொருட்களில் இருந்து மீள்பொதிசெய்யப்பட்டது).*

1A - PG4613 - 217 (2019/08)
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

1. பொதிகளில் விற்பனை செய்யப்படுகின்ற இறைச்சி மற்றும் இறைச்சிசார் உற்பத்திகள்
2. பொதிகளில் விற்பனை செய்யப்படுகின்ற மீன் மற்றும் ஏனைய கடலுணவுகள்
3. பொதி செய்யப்பட்ட தேயிலை மற்றும் தேயிலைப் பைகள்
4. பொதி செய்யப்பட்ட கோப்பி மற்றும் கோப்பித் தூள்.
5. சொக்லேற்றுக்கள், சமையல் சொக்கலேற்றுக்கள் மற்றும் கொக்கோ தூள்
6. சட்னிகள், ஊறுகாய் மற்றும் கூட்டுச்சாறு (Sauces)
7. பொதியிடப்பட்ட அல்லது கொள்கலன்களில் அடைக்கப்பட்ட அரிசி
8. பொதிகளில் அல்லது கொள்கலன்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற மா வகைகள் (ஏதேனும் தானியம் அல்லது பயறு வகைகளிலிருந்து பெறப்படும் மா)
9. பால் மா (முழு ஆடைப்பால் மா, கொழுப்பு குறைந்த, கொழுப்பு அற்ற, குழந்தைகளுக்கானது மற்றும் மோல்ட் சேர்க்கப்பட்டது)
10. பொதிகளில் அல்லது கொள்கலன்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற சோயா உற்பத்திகள்
11. பொதிகளில் அல்லது கொள்கலன்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற சீனி
12. பொதிகளில் அல்லது கொள்கலன்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற தானியங்களும் பயறு வகைகளும்
13. பொதிகளில் அல்லது கொள்கலன்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற நூடில்ஸ் (Noodles)
14. பொதிகளில் விற்பனை செய்யப்படுகின்ற பாண் மற்றும் வெதுப்பக (Bakery) உற்பத்தி வகைகள்
15. நோயாளர்களுக்குரிய உணவு வகைகள் மற்றும் சேர்க்கைகள்
16. செத்தல் மிளகாய், பொதியிடப்பட்ட அல்லது கொள்கலன்களில் அடைக்கப்பட்ட மிளகாய்த் தூள் மற்றும் நொருக்கிய மிளகாய்த் தூள் (Crushed Chilies)
17. பொதிகளில் அல்லது கொள்கலன்களில் அடைக்கப்பட்ட கொத்தமல்லி மற்றும் கொத்தமல்லித் தூள்
18. பொதிகளில் அல்லது கொள்கலன்களில் அடைக்கப்பட்ட கடுகு, கடுகுத் தூள் மற்றும் கடுகுப் பசை
19. பொதிகளில் விற்பனை செய்யப்படுகின்ற கராம்பு மற்றும் ஏலக்காய்
20. பொதிகளில் விற்பனை செய்யப்படுகின்ற கறுவாப் பட்டை மற்றும் கறுவாப் பட்டைத் தூள்
21. பொதிகளில் விற்பனை செய்யப்படும் சீரகம் மற்றும் சீரகத் தூள்
22. பொதிகளில் விற்பனை செய்யப்படும் பொருஞ்சீரகம் மற்றும் பெருஞ்சீரகத் தூள்
23. பொதிகளில் விற்பனை செய்யப்படும் வெந்தய விதைகள்
24. பொதி செய்யப்பட்ட அல்லது கொள்கலன்களில் அடைக்கப்பட்ட குழம்புப் பொடி (Curry powder)
25. பொதிகளில் அல்லது கொள்கலன்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற மிளகு மற்றும் மிளகுத் தூள்
26. பொதிகளில் அல்லது கொள்கலன்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற மஞ்சள் தூள் மற்றும் மஞ்சள் பசை
27. பொதி செய்யப்பட்ட அல்லது கொள்கலன்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற வெள்ளைப் பூண்டுப் பசை
28. பொதிகளில் அல்லது கொள்கலன்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற குடம்புளி, குடம்புளி தூள் மற்றும் குடம்புளி பசை
29. பொதிகளில் அல்லது கொள்கலன்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற சமையல் உப்புக்கல் மற்றும் உப்புத் தூள்
30. பொதி செய்யப்பட்ட அல்லது கொள்கலன்களில் அடைக்கப்பட்ட வினாகிரி/வினிகர் (Vinegar)
31. பொதிகளில் அல்லது கொள்கலன்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற கருவாடு, மாசிக் கருவாடு மற்றும் மாசிக் கருவாடு வற்றல்
32. தகரத்திலடைக்கப்பட்ட மீன்
33. பொதி செய்யப்பட்ட அல்லது கொள்கலன்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற முட்டைகள்
34. பொதி செய்யப்பட்ட அல்லது கொள்கலன்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற நீர் அகற்றப்பட்ட/உலர்த்திய பழங்கள் மற்றும் மரக்கறி வகைகள்
35. தகரத்திலடைக்கப்பட்ட பழங்கள் மற்றும் மரக்கறிகள்
36. பொதிகளில் அல்லது கொள்கலன்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற சமைத்த அல்லது பதப்படுத்திய பழங்கள் மற்றும் மரக்கறிகள்
37. பொதிகளில் அல்லது கொள்கலன்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற சமைத்த அல்லது பதப்படுத்திய உணவு வகைகள்

38. பொதிகளில் அல்லது கொள்கலன்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற தேங்காய்ப் பால், தேங்காய்ப் பால்மா மற்றும் உலர்த்திய தேங்காய்
39. செயற்கை வெண்ணெய் (Margarine) மற்றும் வெண்ணெய்க்கட்டி (Butter)
40. பொதிகளில் அல்லது கொள்கலன்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற பாலாடைக் கட்டி வகைகள் மற்றும் துண்டுகளாக்கப்பட்ட பாலாடைக் கடடி வகைகள்
41. பொதிகளில் அல்லது கொள்கலன்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற தயிர் மற்றும் யோகட்
42. பொதிகளில் அல்லது கொள்கலன்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற மென்பான மா வகைகள்
43. பொதிகளில் அல்லது கொள்கலன்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற தூய பால்/பால் திரவியம் (வெற்றுப்பால், சுவையூட்டப்பட்ட அல்லது இனிப்பூட்டப்பட்ட)
44. கட்டியாக்கப்பட்ட பால்/நீர் வற்றச் செய்யப்பட்ட பால்
45. பொதிகளில் அல்லது கொள்கலன்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற பழச்சாறு, பழப்பாகு, பழக் கலவைகள் மற்றும் பரிமாறுவதற்குத் தயாரான பழச்சாறு வகைகள்
46. காற்றூட்டப்பட்ட பானங்கள்/நீர்
47. போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர்
48. இயற்கை நொதிய பிரித்தெடுப்பு உற்பத்திகள்/இயற்கை ஈஸ்ட் மூலம் தயாரிக்கப்பட்ட உற்பத்திகள்
49. பொதிகளில் அல்லது கொள்கலன்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற உணவு நிறமூட்டிகள் உணவுச் சுவையூட்டிகள், உணவு வாசனையூட்டிகள், உணவு பதனமூட்டிகள் மற்றும் உணவுச் சேர்க்கைகள்
50. பொதிகளில் அல்லது கொள்கலன்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற பச்சையான, வறுத்த, உப்புச் சேர்த்த அல்லது உறைப்புச் சேர்த்த கிழங்குகள், கொட்டைகள், கடலை /பருப்பு வகைகள் மற்றும் அதனையொத்த உண்பதற்குத் தயாராகவுள்ள தயாரித்த உணவுகள்
51. உடனடியாக சாப்பிடக்கூடிய தின்பண்டங்கள்/. நொறுக்குத் தீனிகள்
52. குழந்தை உணவுகள்
53. ஐஸ் கிறீம்
54. பிஸ்கட்டுக்கள்
55. பழ ஊறல்/ ஜாம்கள், (Jams) பழச்சாற்றுக் கட்டிகள், ஜெலிகள் (Jellies) மற்றும் பழப்பாகுகள்/ மார்மலேட்டுக்கள் (Marmalades)
56. பொதி செய்யப்பட்ட அல்லது கொள்கலன்களில் அடைக்கப்பட்ட பேரிச்சம்பழம், முந்திரிகை வற்றல்
57. பொதிகளில் அல்லது கொள்கலன்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற கேக் மற்றும் இனிப்புக்கள் போன்ற தின்பண்டங்கள்
58. பொதிகளில் அல்லது கொள்கலன்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற நொடிப் பொழுதில் (Instant) உடனடியாக தயாரிக்கக்கூடிய உணவு வகைகள்
59. பொதி செய்யப்பட்ட அல்லது கொள்கலன்களில் அடைக்கப்பட்ட தானியங்கள்
60. பொதிகளில் அல்லது கொள்கலன்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற பாத்திரம் கழுவும் சவர்க்காரக் கட்டிகள், திரவம் மற்றும் சலவைத் தூள்
61. பொதிகளில் அல்லது கொள்கலன்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற கார் மற்றும் கார் கண்ணாடி கழுவும் பொருட்கள் (Car wash and windscrean cleaner)
62. பொதிகளில் அல்லது கொள்கலன்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற டைல் (Tile) மற்றும் கண்ணாடி கழுவும் பொருட்கள்
63. பொதிகளில் அல்லது கொள்கலன்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற ஆயுர்வேத/மூலிகை உற்பத்திகள்
64. தலை முடிக்கான எண்ணெய், ஜெல், கிறீம், மற்றும் தலைமுடி நிறமூட்டிகள்
65. சலவைத் தூள் (துகள்கள் மற்றும் துண்டுகள்) குழந்தை சலவை (தூள் மற்றும் திரவம்)
66. ஷம்பூ, கொண்டிஷனர், ரல்கம் பவுடர், கொலோன், குழந்தைகளுக்கான தெளிப்பான்கள் (Sprays) உடற் பூச்சுக்கள் உள்ளடங்கலான குழந்தைகளுக்கான உற்பத்திப் பொருட்கள்
67. பொதிகளில் அல்லது கொள்கலன்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற பற்பசை மற்றும் வாய் சுத்தம் செய்யும் திரவங்கள்
68. சவர்க்காரம் (குளியல், மருத்துவ குளியல், கார்போலிக், மூலிகை, சவர, மென்மையான, குழந்தை, சலவை குளியல் சவர்க்காரக் கட்டிகள்

69. பொதிகளில் அல்லது கொள்கலன்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற கழிவறை சுத்திகரிப்பான்களும் தொற்று நீக்கிகளும்

70. கொள்கலன்களில் விற்பனை செய்யப்படும் வீட்டு நோய்த் தொற்றுக் காப்புப் பொருள்.

71. பொதிகளில் அல்லது கொள்கலன்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற வீட்டுப்பாவனைக்கான நுளம்பு/பூச்சி விலக்கி திரவங்களும் திவலைகளும்

72. பொதிகளில் அல்லது கொள்கலன்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற சலவைக்குப் பயன்படும் திரவங்கள் (Detergents)

73. பொதியிடப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற திரிதடையம் (Transistor) மற்றும் டோர்ச் மின்கலன்கள் (Torch Battery)

74. சீமெந்து

75. விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும் உரம்/உர வகைகள்

76. விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும் இரசாயன கலவைகள்/இரசாயனங்கள்

இந்த பணிப்புரையானது 2020 சனவரி மாதம் 1 ஆந் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் அமுல்படுத்தப்படும்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் முறையே 25.08.2003 ஆந் திகதியிடப்பட்ட இலக்கம் 1303/1, 21.01.2004 ஆந் திகதியிடப்பட்ட இலக்கம் 1324/18, 26.08.2005 ஆந் திகதியிடப்பட்ட இலக்கம் 1407/23, 22.03.2011 ஆந் திகதியிடப்பட்ட இலக்கம் 1698/8 ஆகிய இலங்கை அரசாங்கத்தின் அதிவிஷேட வர்த்தமானிகளில் பணிப்புரை இலக்கங்கள் 2, 3, 4 மற்றும் 35 ஆம் பணிப்புரைகள் இப் பணிப்புரை மூலம் இரத்துச் செய்யப்படுகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் பணிப்புரைக்கு அமைவாக

கலாநிதி லலித் என். செனவீர
தலைவர்

கொழும்பு
2019.08.07

08 - 828

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில்அச்சிடப்பட்டது.